மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்

இ.ம.எண்.6/2021

அ.வ.எண்.39/2019

மசா1

தேதி :- 14.12.2021

பெயர் :- சோமசுந்தரபெருமாள்

1873ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் 10வது பிரிவின் படி 2021 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் தேதி 14 ஆம் நாள் உதவியாளர் அவர்களால் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:

ஆணையர் மறு ஆய்வு செய்ய அபிடவிட் என் மனைவி போட்டுள்ளார் என்றால் சரிதான். எனக்கு இந்த வழக்கில் வழக்கு மற்றும் மனு நடத்த என் மனைவி எனக்கு அங்கீகார முகவர் என்ற உரிமை கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. வழக்கில் ஆணையர் ஆய்வு செய்யும் போது நானும் என் மனைவியும் உடன் இருந்தோம். முன் வழக்கில் ஆணையர் ரேவதி ஆய்வு செய்யும் போது நானும் என் மனைவியும் உடன் இருந்தோம் என்றால் சரிதான். இரண்டு முறையும் பிரதிவாதியின் ஆவணங்களின் அடிப்படையில் அவர்கள் நிலத்தை அளந்து பாதை கண்டு பிடிக்க வழக்கு போட்டுள்ளோம். முந்தைய வழக்கும் அதற்கு தான் போட்டோம். எனக்கும் வழக்கு சொத்து என் மாமனார் என் மனைவி கொடுத்த ஆவணத்தின் மூலம் தான் பாத்தியம் என்றால் சரிதான். பிரதிவாதிகள் என் மாமனார் ஆறுமுகம் பிள்ளையின் வழிதோன்றல் என்றால் சரிதான். ஆறுமுகம் பிள்ளைக்கு பாதை, அதற்கு வடக்கு மற்றும் தெற்கு உள்ள இடம் சேர்த்து மொத்தம் தென்வடல் எத்தனை அடி பாத்தியம் என்றால் 14 தச்சுமுழம் பாத்தியம். முந்தைய வழக்கில் 6.12.1962 அன்று தெய்வானைக்கு மின்னடிபிள்ளைஅம்மாளுக்கு எழுதி கொடுத்த ஆவணம் பிவாசாஆ1 என் மூலம் குறுக்கு விசாரணையில் போது குறியீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். தெருவின் அகலம் தச்சுக்கு 2 முழம் என்று பிவாசாஆ1ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணம் தவறு ஆகும். ஏற்கனவே ஆணையர் இரண்டு முறை ஆய்வு செய்யும் போது பிரதிவாதி ஆவணங்களின் அடிப்படையில் வழக்கு சொத்து நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்கவில்லை என்றால் சரியல்ல. நான் தற்போது பிரமாண் பத்திரத்தில்

வழக்கு சொத்தில் 1 மீட்டர் ஆக்கிரமிப்பு செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆணையர் அறிக்கையில் 1வது பத்தியில் 2வது தபசில் சொத்து கிழமேல் தெருவாக காணப்படுகிறது என்று சொல்லியுள்ளார். கட்டுமானங்கள் இல்லை என்று சொல்லியுள்ளார். ஆவணங்களில் எது சரியான மற்றும் தவறான அளவு என்று வழக்கு விசாரணைக்கு பிறகு நீதிமன்றம் தான் முடிவு செய்ய வேண்டும் என்றால் சரிதான். என் சொத்து புல எண்.1926ல் உள்ளது என்றால் சரிதான். அதற்கு வடக்கு பக்கம் புல எண்.1925 பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் சரிதான். புல எண்.1926 வடபுற எல்கை கிழமேலாக நேர்கோட்டில் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகளின் இடத்தின் வடபுற எல்கையில் ஏறி இறங்கி உள்ளது என்றும் நேர்கோடாக இல்லை என்றால் சரிதான். என் இடத்திற்கு நேர் வடக்காக பாதை உள்ளது என்று உட்பிரிவு கிடையாது என்றால் இல்லை. ஆனால் பாதை உள்ளது. ஆணையர் வரைபடத்தில் எனது வீட்டிற்கு வேறு பாதை தெற்கு பக்கமாக மேற்கு நோக்கிஉள்ளது என்றால் இல்லை. ஆணையர் அறிக்கையில் பாதையை தெளிவாகவும் அகலம் மேற்கு பக்கம் 3.4 மீட்டர் கீழ் பக்கம் 2.6 மீட்டர் என்று காட்டியுள்ளார் அதனால் மறு ஆய்வு செய்யவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை